**<u>ஶ்ரீ ஐயப்பன் கவசம்</u>**

அரிஹரபுத்ரனை ஆனந்த ரூபனை
இருமூர்த்தி மைந்தனை ஆறுமுகன்
தம்பியை சபரிகிரீசனை சாந்த ஸ்வரூபனை
தினம் தினம் போற்றிப் பணிந்திடுவோமே
ஐயப்ப தேவன் கவசமிதனை அனுதினம்
சொல்ல அல்லல்கள் ஒழியும் தினம் தினம்
துதிக்கத் தீரும் வினையெலாம் நாடிய
பொருளும் நலமும் வருமே.

மண்ணுல கொல்லாம் காத்தருள் செய்ய
மணிகண்ட தேவா வருக வருக
மாயோன் மைந்தா வருக வருக
ஐங்கரன் சோதரா ஐயப்பா வருக

புலி வாகனனே வருக வருக
புவியெல்லாம் காத்திட வருக வருக
பூரனை நாதனே வருக வருக
புண்ணிய மோர்த்தியே வருக வருக

பூத நாயகா வருக வருக
புஷ்களை பதியே வருக வருக
பொன்னம் பலத்துறை ஈசா வருக
அடியாரைக் காக்க அன்புடன் வருக

வருக வருக வாசனன் மைந்தா
வருக வருக வீரமணிகண்டா
வஞ்சனை நீக்கிட வருக வருக
வல்வினை போக்கிட வருக வருக

ஐயம் தவிர்க்கிட ஐயப்பா வருக
அச்சம் அகற்றிட அன்பனே வருக
இருவினை களைந்தே எனையாட்கொள்ள
இருமூர்த்தி மைந்தா வருக வருக

பதினென்படியே பனத்தில் நினைக்க
பண்ணிய பாவம் பொடிப் பொடியாகும்
ஐயப்பா சரணம் என்றே கூறிட
ஐம்பூதங்களும் அடிபணிந்திடும்

சபரி கீர்சனை நினைத்தே நீரிடத்
துன்பங்கள் எல்லாம் தூள் தூளாகும்
சரணம் சரணம் என்றே சொல்லிட
சித்திகள் யாவும் வந்தடைந்திடும்

பாம்பையின் பாலன் பெயர் சொல்லிடவும்

பகைவர்கள் எல்லாம் பணிந்தே வணங்குவர்
ஐயப்பன் பாதம் அநுதினம் நினைக்க
அதனியிலுள்ளோர் அடி பணிந்தேத்துவர்

சரணம் சரணம் ஐயப்பை
சரணம் சரணம் சபரி கிரீசா
சரணம் சரணம் சற்குருநாதா
சரணம் சரணம் ஸ்வாமியே சரணம்

**வேண்டுதல்**

சிவனார் மகன் என் சிரசினைக் காக்க
நெடுமால் மைந்தன் நெற்றியைக் காக்க
கஜமுகன் தம்பி என கண்ணினைக் காக்க
நாரணன் பாலன் நாசியைக் காக்க
இருமூர்த்தி மைந்தன் என் இருசெவி காக்க
வாபரின் தோழன் வாய்னைக் காக்க
பம்பையின் பாலன் பற்களைக் காக்க
நான்முகப் பூஜியன் நாவினைக் காக்க

கலியுகவரதன் என் கழுத்தினைக் காக்க
குமரன் தம்பி என் குரல்வளை காக்க
புஷ்களை நாதன் புஜங்களைக் காக்க
முக்கண்ணன் பாலன் குழுங்கையைக் காக்க

வீரமணி கண்டன் விரல்களைக் காக்க
கயிலை மைந்தன் கைகளைக் காக்க
மணிகண்ட தேவன் மார்பினைக் காக்க
வன்குலி வாகனன் வயிற்றினைக் காக்க

முழுமுதற் கடவுள் முதுகினைக் காக்க
இருமுடிப்பிரியம் என் இடுஜ்மச்னைக் காக்க
பிரம்பாபுதன் என் பிட்டங்கள் காக்க
தர்மசாஸ்தா துடைதனைக் காக்க

முருகன் சோதரன் முழுங்கால் காக்க
கற்பூரர ஜோதி என் கணைக்கால் காக்க
பந்தள பாலன் பாதத்தினைக் காக்க
விஜய குமாரன் விரல்களைக் காக்க

அன்னதானப் பிரபு அங்கமெல்லாம் காக்க
ஆரயங்கா ஜோதி அன்புடன் காக்க
காட்டாள ரூபி காலையில் காக்க
நவக்ரஹ நாதன் நடுப்பகல் காக்க

மாலிஸ்ரீ மகனோர் மிசூலையில் காக்க
அரிஹர ரிபூயுசூஸ அந்தியில் காக்க

இன்ப மய ஜோதி இரவினில் காக்க
எருமெலி சாஸ்தா  என்றுமே காக்க

அரியின் மகனார் அநுதினம் காக்க
நடராஜன் பாலன் நாள்தோறும் காக்க
வாசசன் செல்வன் வலப்புறம் காக்க
இருமுடி  ஈசன் இடப்புரம் காக்க

காக்கக் காக்கக் கருணையால் காக்க
பார்க்கப் பார்க்க என் பாவம் பொடி பட
இன்மையும் மறுமையும் இல்லாதொழிந்த்ட
ஈசன் மகன் எனை என்றும் காக்க

கொடிய விஷங்களும் கொள்ளை நோய்களும்
குருதியைக் குடிக்கும் துஷ்டப் பேய்களும்
காந்தமலை தனைக் கருத்தில் கொண்டிட
கலங்கி மறைந்திடக் கருணை புரிவாய்

பில்லி சூனியம் பலவித வஞ்சனை
பம்பையின் பாலன் பெயர் சொல்லிடவும்
பஞ்சாய்ப் பறக்க வரமெனக் கருள்வாய்
பயங்களைப் போக்கி அபயம் அளிப்பாய்

வாதம் பித்தம் சிலேட்சுமத்துடனே
வாந்தியும் பேதியும் வலிப்பும் சுளுக்கும்
எவ்வித நோயும் எனையணுகாமல்
என்ருமே காப்பாய் எருமேலி தேவா

கல்வியும் செல்வமும் கள்ளமில்லா மனமும்
நல்லோர் உறவும் நாளும் அருள்வாய்
நல்ல மனத்துடன் உனை நான் துதிக்க
நித்தமும் அருள்வாய் சபரி கிரீசா

காமம், குரோதம், லோபம், மோகம்,
மத மார்சர்ய மெனும் ஐம்பெரும் பேய்களை
என்றும் என்னை அணுகி விடாமல்
ஐயப்ப தேவா வரமெனக் கருள்வாய்

மூப்பும் பிணியும் வறுமையும் பசியும்
வந்தென்ன வாட்டி வதை செய்யாமல்
உள்ளன்புடனே உன் திருநாமம்
அநுதினம் சொல்ல அருள் தருவாயே

**<u>நமஸ்காரம்</u>**

அரிஹரபுத்ரா அன்பா நமோ நமோ
சபரி கிரீசா சாஸ்தா நமோ நமோ
பதினென் படி வாழ் பரமா நமோ நமோ
ஐங்கரன் சோதரா ஐயப்பா நமோ நமோ
பொன்னமபலத்துறை புண்ணியா நமோ நமோ
புலிப்பால் ஈந்த புண்ணியா நமோ நமோ
கரிகாயுத முடை சுந்தரா நமோ நமோ
மஹிஷி மர்த்தனா மனிகண்டா நமோ நமோ

சரணம் சரணம் சபரி கிரீசா
சரணம் சரணம் சத்ய ஸ்வரூபா
சரணம் சரணம் சர்வ தயாளா
சரணம் சரணம் ஸ்வாமியே சரணம்